**செய்தி வெளியீடு எண்: 189** **நாள்: 01.03.2019**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 27.2.2019 அன்று தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் 34 கோடியே 77 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை தலைமை அலுவலகக் கட்டடம், தி.நகர் மண்டல உதவி ஆணையாளர் அலுவலகக் கட்டடம், அமுதம் பல்பொருள் அங்காடி, பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக தலைமை அலுவலக கூடுதல் கட்டடம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அரியலூர் மண்டல அலுவலகக் கட்டடம் மற்றும் 17 சேமிப்பு கிடங்குகள் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

சென்னை, நந்தனத்தில் 3 கோடியே 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை தலைமை அலுவலகக் கட்டடம், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் தி.நகர் மண்டல உதவி ஆணையாளர் அலுவலகக் கட்டடம், அமுதம் பல்பொருள் அங்காடி மற்றும் பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடி;

சென்னை, கீழ்பாக்கத்தில் 4 கோடியே 7 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக தலைமை அலுவலக கூடுதல் கட்டடம், அரியலூரில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மண்டல அலுவலகக் கட்டடம்;

திருவண்ணாமலை மாவட்டம் – கலசப்பாக்கம் வட்டம், எலத்தூர் கிராமம் மற்றும் சேத்துபட்டு வட்டம், தச்சம்பாடி கிராமம்; தஞ்சாவூர் மாவட்டம் – ஒரத்தநாடு வட்டம், ஒரத்தநாடு கிராமம்; புதுக்கோட்டை மாவட்டம் – திருமயம் வட்டம், துளையனூர் கிராமம் மற்றும் பொன்னமராவதி வட்டம், கொன்னையூர் கிராமம் ஆகிய இடங்களில் 13 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தலா 1000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட விஞ்ஞான முறையிலான 10 சேமிப்பு கிடங்குகள்;

தருமபுரி மாவட்டம் – பாப்பிரெட்டிபட்டி வட்டம், போசிநாயக்கன் அள்ளி கிராமம் மற்றும் சிவகங்கை மாவட்டம் – திருபுவனம் வட்டம், ஏனாதி கிராமம் ஆகிய இடங்களில்

8 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தலா 1500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட விஞ்ஞான முறையிலான 4 சேமிப்பு கிடங்குகள்;

விருதுநகர் மாவட்டம் – ராஜபாளையம் வட்டம், சோழபுரம் கிராமத்தில் 4 கோடியே 56 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தலா 1000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 சேமிப்பு கிடங்குகள் மற்றும் 1500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 1 சேமிப்பு கிடங்கு, என மொத்தம் விஞ்ஞான முறையிலான 3 சேமிப்பு கிடங்குகள்;

என மொத்தம் 34 கோடியே 77 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலகக் கட்டடங்கள் மற்றும் சேமிப்புக் கிடங்குகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.இரா. காமராஜ், அரசு தலைமைக் கொறடா திரு.எஸ். இராஜேந்திரன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் திரு.தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி மு. சுதாதேவி, இ.ஆ.ப., உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் திருமதி எஸ். மதுமதி, இ.ஆ.ப., குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை கூடுதல் காவல்துறை இயக்குநர் முனைவர் பிரதீப் வ. பிலிப், இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 01.03.2019**